# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்: 300/2016/பே–2

ஆணை நாள். 01 –08–2018

**திரு.எம்.கன்னியப்பன்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** –– முறையீட்டு மனுதாரர்.

**1.பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,**
**ஓமலூர் பேரூராட்சி.**
**2.செயல் அலுவலர்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்** –– எதிர் மனுதாரர்கள்.

## ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் எனக்குறிப்பிட்டு முழு முகவரியின்றி வரப்பெற்ற திரு.எம்.கன்னியப்பன் என்பவரின், நாளிடப்படாத புகார் மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2016ல் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 300/2016 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவின் மீது அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுவில், ஓமலூர் பேரூராட்சியில் பேருந்து சுங்க வரி வசூல் 2014–15ம் ஆண்டில் ரூ.19.50 லட்சத்திற்கு ஏலம் போனதாகவும், பின்னர் அதற்கு அடுத்த ஆண்டில் பேரூராட்சி துணைத் தலைவர் திரு.பிரகாஷ் என்பவர் தலைவர் பொறுப்பில் இருந்த காலத்தில் 2015–16ம் ஆண்டில் ரூ.14.00 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டதாகவும், இதற்கு மேற்படி பேரூராட்சி துணைத் தலைவர் ஏலம் எடுத்த உரிமையாளரிடம் ரூ.10.00 லட்சம் லஞ்சமாக பெற்றுக் கொண்டு இந்த பணத்தினை துணைத் தலைவர், கவுன்சிலர்கள் மற்றும் பேரூராட்சி செயல்அலுவலர் அனைவரும் எடுத்துக் கொண்டதாகவும் இதனால் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்முறைமன்ற நடுவ 15.04.2016ன்படி மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க தெரிவித்து ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி புகார் மனு தொடர்பாக ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கம் பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 20.09.2017ல் ஆஜராகத் தெரிவித்து 10.08.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

20.09.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ர.அசோக்குமார் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"....... தான் ஓமலூர் பேரூராட்சியில் 03.04.2017 முதல் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், தனக்கு முன்னர் திருமதி.உமாராணி என்பவர் ஒன்றரை ஆண்டு காலம் பணிபுரிந்ததாகவும், தற்போது கரூர் மாவட்டத்தில், பள்ளிப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார். அதற்கு முன்னர் திரு.வ.மாதையன், என்பவர் ஒரு ஆண்டு பணி புரிந்ததாகவும் அவர் தற்போது சேலம் மாவட்டம், கண்ணங்குறிச்சி பேரூராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செய்திகள் அனைத்தும் தான் அங்கு செயல் அலுவலராக பணி ஏற்பதற்கு முன்பு நடந்தது எனவும், திரு.வசந்தன் என்பவர் பேருந்து சுங்க வசூல் ஏலத்தில் ரூ.6.00 லட்சத்திற்கு ஏலம் எடுத்து தொகையினை கட்டவில்லை என்பதால் அவருக்கு வழங்கப்பட்ட 24 மணி நேர அவகாசத்திற்குள் மேற்படி தொகையினை செலுத்த தவறியதால் ஏலம் ரத்து செய்யப்பட்டதாகவும், கால அவகாசமின்மையால் சுங்க வசூல் முறை, துறை மூலம் (பேரூராட்சி மூலம்) செய்யப்படுவதாகவும், தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதை எதிர்த்து திரு.வசந்தன் என்பவரால் உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில், அடுத்து ஏலம் விடும்போது திரு.வசந்தன் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும் என உயர்நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேருந்து சுங்க வசூல் தினமும் ரூ.850/– முதல் ரூ.900/– வரை வசூல் செய்யப்படுவதாகவும், இது குறித்து தணிக்கைத் தடைகள் ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின்போது கூடுதல் விவரங்களை விரைவில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

அதன்படி ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.10.2017–ம் நாளிட்ட அறிக்கையில் ஓமலூர் பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட பேருந்து சுங்க வசூல் கடந்த ஆண்டுகளில் ஏலம் விடப்பட்ட விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ.எண் | ஆண்டு | ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஏலதாரர் பெயர். | ஏலத் தொகை ரூ. | ஏல நடவடிக்கையின்போது பணியில் இருந்த செயல் அலுவலர்களின் பெயர். |
|---|---|---|---|---|
| 1. | 2014–15 | திரு.ஜி.வெங்கடாஜலம், த/பெ திரு.கோவிந்தராஜ் | 2,52,000 | திரு.மு.கோவிந்தராஜு |
| 2. | 2015–16 | திரு.ஜி.வெங்கடாஜலம், த/பெ திரு.கோவிந்தராஜ் | 2,64,600 | திரு. வ. மாதையன் |
| 3. | 2016–17 | திரு.ஜி.வெங்கடாஜலம், த/பெ திரு.கோவிந்தராஜ் | 2,77,830 | திருமதி.சு.உமாராணி |
| 4. | 2017–18 | நாளது தேதி வரை பேரூராட்சி மூலம் வசூல் செய்யப்படுகிறது | --- | திரு. ர. அசோக்குமார். |

2017–18ம் ஆண்டிற்கு செயல் அலுவலர் திருமதி.சு.உமாராணி என்பவரால் 22.03.17–ஆம் தேதியில் ஏலம் விடப்பட்டு அதிக ஏலத் தொகைக்கு கேட்ட திரு.அ. வசந்த் என்பவர் ரூ.6.00 லட்சத்திற்கு அதிக பட்சமாக ஏலம் கேட்டதாகவும், உரிய காலத்தில் ஏலத் தொகையினை செலுத்தாததால், அப்போதைய செயல் அலுவலர் திருமதி.சு.உமாராணி என்பவரால் மேற்படி ஏலம் ரத்து செய்யப்பட்டு மீண்டும் 30.03.2017ல் ஏலம் நடத்த முனைந்தபோது திரு.அ.வசந்த் என்பவரால் பிரச்சினை ஏற்பட்டு ஏலம் நடத்த இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பின்னர் 01.04.2017 முதல் நாளது தேதி வரை துறை மூலமாக சுங்க தொகை வசூல் செய்யப்பட்டு வருவதாகவும், மேற்கண்ட இடத்திற்கு பேரூராட்சி கடித ந.க.எண்.65/2017/அ.2/நாள்.09.06.2017ன்படி 28.06.2017ல் ஏலம் நடத்த அறிவிப்பு செய்யப்பட்டு பின்னர் நிர்வாகக் காரணங்களினால் 30.06.2017க்கு ஏலம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் திரு. அ.வசந்த் என்பவரால் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு

எண்.W.P.No.14832/2017 and W.M.P.Nos. 16078, 17448 and 17449 of 2017ல் வழக்கு தொடர்ந்து திரு.அ.வசந்த் என்பவரை ஏலத்தில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்க உயர்நீதிமன்றத்தால் அறிவுரை வழங்கி மேற்படி வழக்கு முடிக்கப்பட்டதாகவும், மேற்படி ஏலம் பல்வேறு நிர்வாக காரணங்களினால் நடத்தப்படாமல், 01.04.2017 முதல் மேற்படி சுங்க வசூல் பேரூராட்சி மூலம் நடத்தப்படுவதாக ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 09.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்திட ஏதுவாக இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து, ஓமலூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர்களான திரு.வெ.அத்தியப்பன், திரு.மு.கோவிந்தராஜு, திரு.வ.மாதையன், திருமதி.சு.உமாராணி மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு.ர.அசோக்குமார் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

08.01.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான, ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி.சு.உமாராணி, மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினைக் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் ஓமலூர் பேரூராட்சியில் 30.11.2015 முதல் ஒன்றரை ஆண்டு செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், ஓமலூர் பேரூராட்சி சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுக்களின் விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். ஓமலூர் பேரூராட்சியில் சாலையோரக் கடைகள் 2012–13ம் ஆண்டில் ரூ.19,00,900/–க்கு ஏலம் போனதாகவும், 2013–14ம் ஆண்டில் ரூ.13,53,000/–க்கு ஏலம் போனதாகவும் தெரிவித்து, இந்த விவரம் புகார் மனுவில் பேருந்து சுங்க வசூல் என தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேருந்து சுங்க வசூல் ரூ.2,77,830/–க்கு ஏலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், சாலையோரக் கடைகள் முதல் ஆண்டைவிட ரூ.6.00 லட்சம் குறைவாக ஏலம் விடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அப்போது திரு.பிரகாஷ், 2013–14ல் தலைவர் பொறுப்பில் இருந்ததாகவும், 2014–15ம் ஆண்டில் ஐந்து சதவீதம் உயர்வு அளிக்கப்பட்டு ஏலம் நிர்ணயிக்கப்பட்டதாகவும், அப்போது திரு.கோவிந்தராஜ் செயல் அலுவலராகவும், 2015–16ம் ஆண்டு திரு.கிருஷ்ணன், அவர்களுக்கு ஏலம் நிர்ணயம் செய்யப்பட்ட போது திரு.மகாதேவன் செயல் அலுவலராக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். தான் பணியேற்ற பின்னர் மறு ஏலம் கொண்டு வந்து காவல் துறை உதவியுடன் துணைத் தலைவர் திரு.பிரகாஷ் போன்றவர்களின் எதிர்ப்பினை மீறி ரூ.32,50,000/–க்கு ஏலம் விடப்பட்டதாகவும், சேவை வரி உட்பட ரூ.37,86,367/–க்கு ஏலம் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். தன்னுடைய கடுமையான நடவடிக்கையின்பேரில் முதல் ஆண்டை போலவே துணைத் தலைவருடைய அச்சுறுத்தலால் குறைந்த தொகைக்கு ஏலம் விடப்படாமல் பேரூராட்சிக்கு நஷ்டம் ஏற்படாமல் அதிக தொகைக்கு ஏலம் விடப்பட்டதாகவும், இது சம்பந்தமாக விவரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சாலையோர கடைகள் ஏலம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

| வ.எண் | ஆண்டு | ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத் தொகை ரூ | ஏல நடவடிக்கையின்போது பொறுப்பில் இருந்த செயல் அலுவலர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 2012–13 | திரு.வி.கிருஷ்ணன், மேட்டுப்பட்டி, ஓமலூர் | 19,00,900 | திரு.கே.பி.சுந்தரராஜன் |
| 2. | 2013–14 | திரு.வி.கிருஷ்ணன், மேட்டுப்பட்டி, ஓமலூர் | 13,51,000 | திரு.ச.சா.மகாதேவன் |
| 3. | 2014–15 | திரு.வி.கிருஷ்ணன், மேட்டுப்பட்டி, ஓமலூர். | 14,18,550 | திரு.கோவிந்தராஜு |
| 4. | 2015–16 | திரு.வி.கிருஷ்ணன், மேட்டுப்பட்டி ஓமலூர். | 14,89,478 | திரு.வ.மாதையன். |
| 5. | 2016–17 | திரு.கே.ரத்தினசாமி, மேட்டுப்பட்டி, ஓமலூர் | 32,51,000 | திருமதி. சு.உமாராணி |

08.01.2018 அன்று ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.வெ.அத்தியப்பன், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........ தான் ஓமலூர் பேரூராட்சியில் 09.04.2012 முதல் 06.02.2013 வரை செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், அப்போது திரு.ஒ.கே.ஏகாம்பரம், என்பவர் பேரூராட்சித் தலைவராகவும், திரு.பிரகாஷ், துணைத் தலைவராகவும் இருந்ததாக தெரிவித்துள்ளார். தன்னுடைய பணிக்காலத்தில் பணி நியமனம் எதுவும் நடக்கவில்லை எனவும், அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் ஏதும் உருவாகவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 5 சதவீத உயர்வில் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஏல நடவடிக்கைகள் நீடித்து வந்ததால் தன்னுடைய பணிக்காலத்தில் புதிய ஏல நடவடிக்கைகள் ஏதும் நடக்கவில்லை எனவும் தனது பணிக்காலத்தில் தலைவராக இருந்த திரு.ஒ.கே.ஏகாம்பரம் தான் இருந்த காலத்தில் எந்த முறைகேடும் இல்லாமல் நேர்மையாகவே இருந்ததாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 23.01.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2018 அன்று ஆஜரான ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.வா.மாதையன், மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் ஓமலூர் பேரூராட்சியில் 11 மாத காலம் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், இப்பேரூராட்சி சம்பந்தமான புகார் விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். தனது பணிக்காலத்திற்கு முன்பே பேருந்து சுங்க வசூல் ஆரம்பித்து விட்டது என்றும், 27.11.2014 முதல் 27.10.2015 வரை தனது பணிக்காலத்தில் எந்த முறைகேடுகளும் புகார்களும் வரப்பெறவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

28.03.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.கே.பி.சுந்தரராஜன், மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது வாக்குமூலத்தில் தான் ஓமலூர் பேரூராட்சியில் 28 நாட்கள் மட்டுமே பணிபுரிந்ததாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள செய்திகள் தனது பணிக்காலத்தில் நடக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.06.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக ஓமலூர் பேரூராட்சியில் பணிபுரிந்து முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாத முன்னாள் செயல் அலுவலர்களான, திரு.ச.சா.மகாதேவன் மற்றும் திரு.மு.கோவிந்தராஜு ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 23.07.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இதன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 23.07.2018 அன்று ஆஜரான, ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.மு.கோவிந்தராஜு, தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் ஓமலூர் பேரூராட்சியில் 18.02.2014 முதல் 24.08.2016 வரை பணிபுரிந்ததாகவும், பின்னர் கடைசியாக திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து 31.05.2018ல் ஓய்வு பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். ஓமலூர் சாலையோரக் கடைகள் 2012-13ல் ரூ.19,00,900/-க்கு ஏலம் போனதாகவும் அப்போது, தான் அங்கு பணிபுரியவில்லை எனவும், 2013-14ம் ஆண்டு ரூ.13,51,000/-க்கு ஏலம் போனதாகவும் அப்போதும் தான் அங்கு பணிபுரியவில்லை எனவும், 2014-15ம் ஆண்டு தான் செயல் அலுவலராக ஓமலூர் பேரூராட்சியில் பணிபுரிந்த போது ஏற்கனவே இருந்த ஏலத் தொகையினை விட ஐந்து சதவீதம் உயர்வு செய்து ரூ.14,18,580/- ஆக ஏலம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தம் நீட்டித்து வழங்கப்பட்டதாகவும், தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் ஏலம் நீட்டித்து வழங்கலாம் என்பதால் திரு.மகாதேவன் 2013-14ல் ஏலம் விட்ட தொகையான ரூ.13.51 லட்சத்திற்கு மேல் ஐந்து சதவீதம் கூடுதலாக நிர்ணயித்து ஏல புதுப்பிப்பு செய்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஓமலூர் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரான திரு ச.சா.மகாதேவன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தால் 23.01.2018, 09.04.2018 மற்றும் 07.06.2018 ஆகிய தேதிகளில் அழைப்பாணை அனுப்பியும் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

2012–13ம் ஆண்டில் சாலையோரக் கடைகள் ரூ.19,00,900/– க்கு ஏலம் போன நிலையில் 2013–14ம் ஆண்டில் ரூ.13,51,000/– க்கு மட்டுமே ஏலம் விடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/நாள். 03.07.2007–ன்படி ஒரு கடையினை ஒரே நபருக்கு தொடர்ந்து புதுப்பிப்பதாக இருந்தாலும், ஏற்கனவே உள்ள ஏலத் தொகையில் 5% உயர்த்தி ஏலத் தொகை நிர்ணயம் செய்து புதுப்பிக்கப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ள நிலையில், 2013–14ம் ஆண்டில் ஏற்கனவே ஏலம் விடப்பட்ட தொகையினை காட்டிலும் சுமார் ரூ.5.49 லட்சத்திற்கு குறைவாகவே ஏலம் விடப்பட்டுள்ளது, அரசு விதிமுறைகளை மீறியதாகவே உள்ளது. இது சம்பந்தமாக இக்காலத்தில் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக இருந்த திரு ச.சா.மகாதேவன் தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக தெரிவித்து மூன்று அழைப்பாணைகள் அனுப்பியும் ஆஜராகவில்லை. மேலும் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சாலையோரக் கடைகள் முந்தைய ஆண்டைக்காட்டிலும் அரசு விதிகளை மீறி குறைவானத் தொகைக்கு ஏலம் விடப்பட்டமைக்கான எந்த விளக்கமும் அளிக்கவில்லை. இந்நிலையில் மேற்படி சாலையோர கடைகள் 2012–13ம் ஆண்டைவிட 2013–14ம் ஆண்டிற்கு குறைவான தொகைக்கு ஏலம் அனுமதித்தவகையில் முன்னாள் செயல் அலுவலர் திரு.ச.சா.மகாதேவன், என்பவரை பொறுப்பாக்கி பேரூராட்சிக்கு ரூ.5.49 லட்சம் இழப்பீட்டினை ஈடு செய்யவும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது. மேலும் 2014–15ம் ஆண்டில் பணியில் இருந்த செயல் அலுவலரும் , மேற்படி ஆண்டிற்கான ஏலத்தினை முறையாக நடத்தாமல், சென்ற ஆண்டில் உள்ள தொகையில் 5% உயர்த்தி வழங்கியிருப்பதின் மூலம் ஓமலூர் பேரூராட்சிக்கு சாலையோரக்கடைகள் ஏல வசூல் தொடர்ந்து இழப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே இவ்விழப்பிற்கு காரணமான செயல் அலுவலர்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 01 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 14/8/2018

பெறுநர்

1.செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.